மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, 1988–89 ஆம் ஆண்டில் பரமக்குடி கோட்டத்திற்கு 1,42,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்தத் தொகையில் 1,41,500 ரூபாய் செலவு செய்யப்பட்டு மீதமுள்ள தொகை நடப்பாண்டில் 1989–90 இல் செலவு செய்யப்பட உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: பேரவைத் தலைவரவர்களே, ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதைப் போல. வேலையை மேலே வைத்து, தொகையைக் கீழே கொண்டு செல்லுகின்ற விவசாய அலுவலர்களை நீக்கிவிட்டு, விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு விவசாயப் பல்கலைக் கழகத்திலும், விவசாயத் துறையிலும் முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

அணை கட்டும் திட்டங்கள்.

* 2077. திரு. அ. மாரிமுத்து:
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வானூர் தொகுதியில் கழுவெளி என்றழைக்கும் பகுதியில் புலியங்கால் ஓடையின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

திரு. அ. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கழுவெளி பகுதியில் ஏறக்குறைய 25 ஆண்டுக் காலமாக சுமார் 25,000 ஏக்கர் விளை நிலங்களின், வெள்ளக் காலங்களில் நீர்ப் பிடிப்பினால் பாதிக்கப்பட்டு, அவ்வப்பொழுது இந்தக் கேள்வியை எழுப்புவதும், அரசாங்கத்தினுடைய நிதி நிலைமை மோசமாக இருக்கிறது, பரிசீலிக்கப்படும் என்று பதிலைக் கூறுவதும் தொடர்ந்து வழக்கமாக இருந்து வருகிறது. எனவே, நிரந்தரத் தீர்வு கண்டு அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருமக்கள் பலன் பெறுகின்ற வகையில் நிரந்தரமான ஒரு பரிகாரத்தை அரசு செய்து தருமா என்று சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1990 சனவரி 19]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தத் துணைக் கேள்வியின் மூலம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்ததற்காக அரசு இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்கும்.

திரு. அ. மாரிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, சம்பந்தப் பட்ட செயற் பொறியாளர் அவர்களை அணுகிக் கேட்கின்ற பொழுது அதற்கு விவசாயத் துறை மூலமாக நடவடிக்கை எடுப் பதா அல்லது வனத் துறையின் மூலம் நடவடிக்கை எடுப்பதா அல்லது பொதுப் பணித்துறை மூலமாக நடவடிக்நை எடுப்பதா என்ற ஒரு ஐயப்பாடு எங்களிடையே இருக்கிறது என்று— சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுகிறார்கள். அதுபற்றிய முழுமை யான விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அதைத் தான்—உறுப்பினர் சொன்ன அத்தனையையும் அரசு பரிசீலிக்கும் என்று—சொன்னேன்.

* 2112. திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் காட்டேரியில் வரும் மழை தண்ணீரைத் தேக்கி சிறு அணை கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்பமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் இருக்கின்ற காட்டேரியில் அணை கட்டுவதற்குத் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முந்தைய அரசின் முதல்வராக இருந்த பொழுது நேரில் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அந்தக் காட்டேரியின் சுற்றுப்புறம் மூன்று புறமும் மலையால் சூழப்பட்டிருக்கிறது. ஒரு புறம் மட்டும் தடுப்புச் சுவர் எழுப்பி காட்டேரியில் அணை கட்டினால் அந்தச் சுற்றுச் சூழ்நிலையில் இருக்கின்ற விவசாயி களுக்குப் பாசனத்திற்கு நீர் வசதியும், சுற்று வட்டாரத்தில் இருக்கின்ற கிராமங்களுக்குக் குடிநீர் வசதியும் ஏற்படுத்த முடி யும். ஆகவே, இந்த அரசு உடனடியாக அந்த இடத்தில் அணையைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.